[redacted]

முழுப் பதிப்புரிமையுடையது | அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2023 (2024)

# 72 – தமிழ்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது
பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில்
பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப
இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை -2023 (2024)

## 72- தமிழ்

## புள்ளி வழங்கும் திட்டம்

### பத்திரம் I

பகுதி I

கட்டாய வினாக்கள்

| | | |
|---|---|---|
| வினா 01 | | 24 புள்ளிகள் |
| வினா 02 | | 16 புள்ளிகள் |

பகுதி II

| | | |
|---|---|---|
| எவையேனும் மூன்று வினாக்கள் | 20X3 | 60 புள்ளிகள் |
| | | 100 புள்ளிகள் |

### பத்திரம் II

பகுதி I

கட்டாய வினாக்கள்

| | | |
|---|---|---|
| வினா 01 | | 20 புள்ளிகள் |
| வினா 02 | | 25 புள்ளிகள் |
| வினா 03 | | 25 புள்ளிகள் |

பகுதி II

| | | |
|---|---|---|
| எவையேனும் இரண்டு வினாக்கள் | 15X2 | 30 புள்ளிகள் |
| | மொத்தம் | 100 புள்ளிகள் |

**இறுதிப் புள்ளி கணித்தல்**

| | |
|---|---|
| பத்திரம் I | 100 புள்ளிகள் |
| பத்திரம் II | 100 புள்ளிகள் |
| மொத்தம் | 200 புள்ளிகள் |

இறுதிப் புள்ளி $\left(\frac{100+100}{2}\right) = 100$ புள்ளிகள்

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை -2023 (2024)
## 72- தமிழ் - I
## புள்ளி வழங்கும் திட்டம்

இவ்வினாத்தாளிற் கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களுள் , முதலாம் பகுதியிலுள்ள முதலாம், இரண்டாம் மூன்றாம் வினாக்களுக்கும் , இரண்டாம் பகுதியிலுள்ள ஐந்து வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்குப் பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும்.

## பகுதி I

01. அ. i. 04 புள்ளிகள் ii. 04 புள்ளிகள் iii. 04 புள்ளிகள்
ஆ. i. 04 புள்ளிகள் ii. 04 புள்ளிகள் iii. 04 புள்ளிகள்
(12 + 12 = 24 புள்ளிகள்)

02. (அ) அல்லது (ஆ)
i. 04 புள்ளிகள் ii. 04 புள்ளிகள் iii. 04 புள்ளிகள்
iv. 04 புள்ளிகள்

(04 x 04 = 16 புள்ளிகள்)

## பகுதி II

03. அ. 05 புள்ளிகள் ஆ. 05 புள்ளிகள் இ. 05 புள்ளிகள்
ஈ. 05 புள்ளிகள்

(05+ 05+05+ 05 = 20 புள்ளிகள்)

04. அ. 05 புள்ளிகள் ஆ. 05 புள்ளிகள் இ. 05 புள்ளிகள்
ஈ. 05 புள்ளிகள்

(05+ 05+05+ 05 = 20 புள்ளிகள்)

05. அ. 07 புள்ளிகள் ஆ. 07 புள்ளிகள் இ. 06 புள்ளிகள்

(07+ 07+06 = 20 புள்ளிகள்)

06. அ. 07 புள்ளிகள் ஆ. 07 புள்ளிகள் இ. 06 புள்ளிகள்

(07+ 07+06 = 20 புள்ளிகள்)

07. அ. 07 புள்ளிகள் ஆ. 07 புள்ளிகள் இ. 06 புள்ளிகள்

(07+ 07+06 = 20 புள்ளிகள்)

08. அ.
ஆ.
இ.
ஈ.
உ.

பரீட்சார்த்திகளின் இரண்டு தெரிவுகளுக்கு தலா 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்

(10 x 02 = 20 புள்ளிகள்)

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது தெளிவான இலக்கத்தில் எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................ ✓ $\frac{4}{5}$
........................................................................
........................................................................

(ii) ........................................................................ ✓ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(iii) ........................................................................ ✓ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

●●●

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

දෙමළ I
தமிழ் I
Tamil I

**72 T I**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடம்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் - எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு - விடை எழுதுக.

## பகுதி I

1. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல்வனப் பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉம் நுதலும் நன்றும்
நல்லமன் வாழி தோழி பல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே.

(i) தலைவனது பிரிவால் தனக்கு உண்டாகிய வருத்தத்தை தலைவி எவ்வாறு எடுத்துரைக்கிறாள்?

(ii) முன்பு தன்னிடம் விளங்கிய உடற்பொலிவை விவரிப்பதற்கு தலைவி கையாண்ட உவமைகளை இனங்கண்டு விளக்குக.

(iii) தனது எதிர்கால வாழ்வு பற்றிய ஏக்கத்தை தலைவி உள்ளுறையுவமையூடாக உணர்த்துமாற்றினை விளக்குக.

(I) - முன்பு அழகோடிருந்த தன்னுடைய மேனி தலைவன் தன்னைப் பிரிந்ததனால் அழகிழந்தது என்று கூறுவதன் மூலம் எடுத்துரைக்கிறார்.

**(04 புள்ளிகள்)**

(II) - பூவொடு புரையுங் கண்

உவமானம் : பூ
உவமேயம் : கண்
பொதுத்தன்மை : அழகு

- வேயென விறல்வனப் பெய்திய தோள்

உவமானம் : மூங்கில்

உவமேயம் : தோள்

பொதுத்தன்மை : தோற்றம்/அழகு

- பிறையென மதிமயக்குறூஉம் நுதல்

உவமானம் : பிறை

உவமேயம் : நெற்றி

பொதுத்தன்மை : வடிவம்

(04 புள்ளிகள்)

(III)

- தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை

- கடற்றுறையிலே உள்ள தாழையின் வெண்ணிற மலர்களை கடற்பறவைகள் என நினைத்து, பிறர் அவற்றைக் கொய்யாதுவிட அவை வீணாதல் போல தன்னுடைய நலனும் தலைவனால் அனுபவிக்கப்படாது வீணாகிவிடுமோ எனத் தலைவி ஏங்குதல்

(04 புள்ளிகள்)

(ஆ) கேட்டனன் கிராதர்வேந்தன்
கிளர்ந்தெழும் உயிர்ப்பனாகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான்
விம்மினன் உவகை பொங்கத்
தீட்டரு மேனி மைந்தன்
சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன் பொய்யில்
உள்ளத்தான் புகல லுற்றான்

(i) இச்செய்யுளில் விவரிக்கப்பெறும் சந்தர்ப்பம் யாது?

(ii) பரதனது பெருங்குணத்தை உணர்ந்துகொண்ட குகனது உணர்ச்சிப்பெருக்கு எவ்வாறு வெளிப்படுகின்றது?

(iii) இச்செய்யுளில் பரதனின் அழகை விவரிக்கும் தொடரினை இனங்கண்டு, அதில் நிரகாணும் நயங்களை விளக்குக.

(12 + 12 = 24 புள்ளிகள்)

(I) பரதன் இராமனை அழைத்துச் செல்லவே வந்தான் என்பதைப் பரதன் வாயிலாக அறிந்த குகன், உணர்ச்சிவயப்பட்டவனாக அவனது கால்களில் வீழ்ந்து வணங்கிய சந்தர்ப்பம்

(04 புள்ளிகள்)

(II)
- பெருமூச்சுவிடுதல் – 1
- மண்ணில் வீழ்தல் – 1
- மகிழ்ச்சி பொங்க விம்முறுதல் – 1
- பரதனைப் பணிந்து அவனது காலை இறுகப் பற்றுதல் – 1

(04 புள்ளிகள்)

(III)

- 'தீட்டரு மேனி மைந்தன் சேவடிக் கமலப்பூ' 2
- 

- பரதன் ஓவியத்தில் வரைய முடியாத அளவு அழகான மேனியை உடையவன் எனல் 2

- பரதனது சிவந்த திருவடிகளைத் தாமரை மலரென உருவகித்துக் கூறல்

(04 புள்ளிகள்)

[12 + 12 = 24 புள்ளிகள்]

2. (அ) பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

(ஆ) பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ)

தேவரெல்லாங் கொலுவிருக்கும் ஈழமெங்கள் தேயஞ்
செப்பிடுவே னதன் பெருமை சற்றிருந்து கேளும்
மூவரன்று பாடுதிருக் கோணமலை நாட்டில்
முத்தொதுக்கிக் கத்துகடல் சூழுமெங்கள் தேயம்.

எத்திசையும் போற்றுங்கதிர் காமமலை நாட்டில்
எங்கள் வள்ளி குடியிருக்கும் ஈழமெங்கள் தேயம்
புத்தபிரான் பொன்னடியாம் பொற்கமல பீடம்
பொலியுமலை எங்கள் மலை ஈழமெங்கள் தேயம். (தேவர்)

மகாவலிகங் கைப்புனலாந் தாவணியை வீசி
மாதிரமெல் லாம்மணக்கும் வாசனையைப் பூசி
காவலரின் கண் மருட்டுங் கன்னி எங்கள் தேயம்
காசினியி லிவளைப்போற் கன்னியில்லை யில்லை. (தேவர்)

செந்தமிழுஞ் சிங்களமு மாயவிரு தோழி
சேவைசெய்யும் இராசகன்னி ஈழமெங்கள் தேயம்
இந்தியரெம் அக்கைமக்கள் என்றனைக்கும் அம்மை
வந்தனையல் லாதெமக்குச் சிந்தனை வேறில்லை. (தேவர்)

(i) ஈழநாட்டின் சமயரீதியிலான சிறப்பு இக்கவிதையில் எவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது?

(ii) ஈழநாட்டைக் கவிஞர் எவ்வாறு உருவகிக்கிறார்? அந்த உருவகம் எவ்வகையில் விரிக்கப்படுகிறது?

(iii) மொழிவாரியான சமத்துவம் ஈழநாட்டில் நிலவுகிறது என்ற கருத்தினை கவிஞர் உணர்த்தும் பாங்கினைத் தெளிவுபடுத்துக.

(iv) 'இந்தியரெம் அக்கைமக்கள் என்றனைக்கும் அம்மை' என்ற தொடர்மூலம் கவிஞர் நுட்பமான முறையில் வலியுறுத்தும் விடயங்கள் யாவை?

(I)

- தேவர்கள் கொலு வீற்றிருத்தல்
- (தேவார முதலிகள்) மூவரால் பாடப்பட்ட திருக்கோணேஸ்வரம் காணப்படுதல்
- யாவரும் போற்றும் கதிர்காமத்தலம் காணப்படல்
- முருகனின் மனையாளாகிய வள்ளி குடியிருத்தல்
- புத்தபிரானின் பாதங்கள் பதிந்த சிவனொளிபாதமலை காணப்படல்

**(04 புள்ளிகள்)**

(II)

- கன்னிப்பெண்ணாக
- மகாவலி கங்கை ஆற்றைத் தாவணியாகக் கொண்டும் திசைகளெல்லாம் மணக்கும் வாசனையைப் பூசியும் காவலரைக் கண்மருட்டி வருபவளாக விபரிக்கப்படுகிறது.

**(04 புள்ளிகள்)**

(III)

- ஈழக்கன்னியின் தோழியராக, சிங்களத்தையும் செந்தமிழையும் சமமாகக் குறிப்பிடுவதன் மூலம்

**(04 புள்ளிகள்)**

(IV)

- இலங்கையரும் இந்தியரும் இனரீதியாகவும் மொழி, பண்பாட்டு ரீதியாகவும் ஒரே பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள்.

- இருவருக்கும் இடையிலான இரத்தபந்தமான உறவு பேணப்பட்டு வருவது; தொடர்ந்தும் பேணப்பட வேண்டியது.

**(04 புள்ளிகள்)**

**அல்லது**

(ஆ) அறுபது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்துவிட்டார். கடிகாரத்தைப் பார்க்காது, கடிகாரத்தின் விநாடிமுள்ளைப் பார்க்கிலும் நுணுக்கமான நேரக்கணக்கில் இயங்குவது அவருடைய இரத்தத்திலேயே ஊறியிருக்கின்றது. கொல்லையிலே கழிவுக்கருமத்தை முடித்து, அடிக்கழுவி, கிணற்றடிக் கமுக மரத்திலே தொங்கும் குரும்பைப் பாதியிற் கிடக்கும் உமிக்கரியினாற் பற்களைச் சுத்தஞ்செய்து, திண்ணைக்கு மீளுவார். 'இறப்பில்' தொங்கும் வெண்சங்கிலே கதிர்காமத்து விபூதி இருக்கும். வலக்கை விரல்களுக்குள் எடுத்து 'சிவ... சிவ...' என்று உச்சரிக்கும்பொழுது, நல்லூர்க்கந்தனின் உதயகாலப் பூசைமணி கேட்கும்.

இன்றும் 'சிவ... சிவ...' என்று விபூதி பூசும்பொழுது, உதயகாலப் பூசைமணி கேட்கின்றது. காலஓட்டத்திலே தரிக்காது நடைபெறும் நித்தியகருமங்கள்.

இன்று வருடப்பிறப்பு. முதன் முதலில் இந்த எண்ணந்தான் முகத்தாருக்கு ஏற்படுகின்றது. எத்தனையோ வருடப்பிறப்புகள் வந்து போய்விட்டன. அவற்றுடன் எத்தனையோ வருடங்களும் ஓடி மறைந்துவிட்டன. பார்வதிப்பிள்ளையைக் கல்யாணஞ் செய்த முதல் வருடம் வந்த வருடப்பிறப்பு; இராமேசுவர நேர்த்திக் கடனுக்குப் பிறகு சுப்பிரமணியனைப் பெற்று, முருகண்டியிலே மயிர்நீக்கக் கடன் செய்த மறுநாள் வந்த வருடப்பிறப்பு; சௌந்தரம் கலியாணமாகி, மருமகனுடன் வந்த வருடப்பிறப்பு; தகப்பனுக்கு தலைக்கொள்ளி வைத்து, கோடி கட்டாதே கழிந்த வருடப்பிறப்பு; பார்வதிப்பிள்ளை போய், நாளே காடாகிக் கிடந்த வருடப்பிறப்பு; இப்படிப் பல. கால ஓட்டம் அவர்தம் உழைப்பை விழுங்கி, உடலைச் சருகாக்கி விட்டது.

முன்னர் போல சுறுசுறுப்பில்லை. நல்லெண்ணையில் வெதுப்பிய கத்தரிக்காயுடன் மூன்று நீற்றுப்பெட்டி பிட்டுச் சாப்பிடும், நாலு மரவள்ளிக்கிழங்கைச் சுட்டுப் பச்சை மிளகாய் சகிதம் போட்டுக் கொண்டாற்றான் காலைப்பசி அடங்கும் என்பன இளைஞப் பருவ நினைவுகள்.

(i) முகத்தாரின் காலந்தவறாத் தன்மை விவரிக்கப்படுமாற்றினை விளக்குக.

(ii) அவரின் இளமைக்கால உடல் வலிமை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

(iii) தன் மனைவிமேல் முகத்தார் கொண்டிருந்த பாசம் வெளிப்படும் தொடர் யாது? அதிற் காணத்தக்க நயம் யாது?

(iv) இவ்வுரைப்பகுதியில் குறிப்பிடப்பெறும் நம்பிக்கைகள், சடங்கு சம்பிரதாயங்கள் எவை?

(4 × 4 = 16 புள்ளிகள்)

(I)

- கடிகாரத்தைப் பார்க்காது காலத்தைக் கணிக்கும் திறம் இரத்தத்தில் ஊறியிருத்தல்
- காலைக்கடன்களை முடிக்கவும் நல்லூரின் உதயகாலப் பூசை மணி ஒலிக்கவும் சரியாக இருத்தல்

**(04 புள்ளிகள்)**

(II)

- நல்லெண்ணெயில் வெதுப்பிய கத்தரிக்காயுடன் மூன்று நீற்றுப்பெட்டி பிட்டும் சாப்பிட்டு நான்கு மரவள்ளிக்கிழங்கைச் சுட்டு பச்சை மிளகாய் சகிதம் போட்டுக்கொண்டாற்றான் காலைப்பசி அடங்கும் என்பதன் மூலம்

(04 புள்ளிகள்)

(III)

- பார்வதிப்பிள்ளை போய், நாளே காடாகிக் கிடந்த வருடப்பிறப்பு 2
- கொண்டாட்டத்திற்குரிய நாள் மனைவியின் இழப்பால் வெறுமையாகக் காணப்படல் 2

(04 புள்ளிகள்)

(IV)

- நேர்த்திவைத்துப் பிள்ளை பெற்றுக்கொள்ளல்
- இறப்பு நடந்தால் ஒரு வருடம் முழுவதும் கொண்டாட்டங்களைத் தவிர்த்து துக்கம் அனுசரித்தல்
- குழந்தைகளுக்கு மயிர்நீக்கக்கடன் செய்தல்
- தலைக்கொள்ளி வைத்தல்

நேர்த்தி புதைதல்

(04 புள்ளிகள்)

[04 × 04 = 16 புள்ளிகள்]

## பகுதி II

**3. இடன் அறிதல் என்னும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.**

(அ) பகைவரை வெல்லக் கருதிய அரசர், பகைநாட்டு அரணின் புறத்தே அதற்கேற்ற இடத்தை அறிதல்

(ஆ) பகைவருடன் போர் செய்வதற்கான இடத்தை அறிதல்

(இ) பகைவருடன் போர் செய்யக்கூடாத இடமும் அவ்விடத்திலே போர் செய்யின் ஏற்படும் பாதிப்பும்

(ஈ) இவ்வதிகாரத்திலே பயின்றுவரும் அணிகளின் பொருத்தப்பாடு

(20 புள்ளிகள்)

அ.

- பகைவர்மேல் போர் தொடர்பான எத்தொழிலையும் ஆற்றுதற்கு முன்பாகவும் பகைவரை இகழ்வதற்கு முன்பாகவும் பகைவரை வளைப்பதற்கு ஏற்ற இடத்தை அறிந்து கொள்ள வேண்டும் (குறள் : 01).
- வல்லமை கூடிய அரசராக இருப்பினும் பாதுகாப்பான அரணைச் சேர்ந்திருப்பது அவர்களுக்கு மிகுந்த பயன்கள் பலவற்றையும் தரும் (குறள் : 02).
- பொருத்தமான இடத்தை அறிந்து தம்மைப் பாதுகாத்துப் போர் செய்தால் வலிமையற்ற அரசரும் வெற்றி பெறுவர் (குறள் : 03).
- தமக்குப் பாதுகாப்பான இடம் அறிந்து, அரணைப் பொருந்திநின்று போர் புரியும் அரசரைப் பிறரால் வெற்றி கொள்ள முடியாது (குறள் : 04).

**(05 புள்ளிகள்)**

ஆ)

- போர் செய்யும் அரசர் வலிமை குறைந்தவராக இருந்தாலும் தமக்குச் சாதகமான இடத்தில் இருந்து போர் செய்தால் வெற்றி பெறுவர் (குறள் : 05).
- எந்த ஒரு அரசரும் அவர்க்குப் பொருத்தமான இடத்திலேயே வலிமை பெறுவர் (குறள் : 06).
- பகைவரை வெல்லும் செயல்களை எண்ணி அவற்றுக்குப் பொருத்தமான இடத்தில் இருந்து வினை மேற்கொள்ளும் அரசர்க்கு அவரது வலிமை மட்டுமே வெற்றிக்குப் போதுமானது (குறள் : 07).

**(05 புள்ளிகள்)**

இ)

- ஓர் அரசன் சிறு படையை உடையவனாயினும் பாதுகாப்புடைய இடத்தில் இருப்பானாயின், அவன்மீது போர் தொடுக்கும் பெரும்படையை உடைய அரசன்கூட அழிவான் (குறள் : 08).
- பகை அரசர் வலிமை குன்றியவராக இருந்தாலும் அவர் பாதுகாப்பாக வாழுமிடத்தில் அவரை வெற்றி கொள்வது அரிதாகும் (குறள் : 09).
- வலிமை மிகுந்த அரசர்களும் பொருத்தமற்ற இடத்தில் போர் செய்தால் தம்மைவிட வலிமை குறைந்தவரிடத்துக்கூட தோற்க நேரிடும் (குறள் : 10).

**(05 புள்ளிகள்)**

ஈ)

- பிறிது மொழிதல் அணி / ஒட்டணி / நுவலாநுவற்சி அணி
- "முதலை நீரிலே பிற உயிர்களை வெல்லும், தரையில் முதலையைப் பிற உயிர்கள் வெல்லும்" என்பதை வெளிப்படையாகக் கூறிய வள்ளுவர், ஓர் அரசர் தனக்குப் பொருத்தமான இடத்தில் போர் புரிந்தால் பகைவரை வெல்ல முடியும் என்பதையும் பொருத்தமற்ற இடத்தில் போர் புரிந்தால் பகைவர் வென்றுவிடுவர் என்பதையும் உள்ளுறையாகக் கூறுகிறார்.
- "வலிமையான சக்கரங்களையுடைய தேர் கடலில் ஓடா, கடலில் ஓடக் கூடிய கப்பல்கள் நிலத்தில் ஓடா" என்பதை வெளிப்படையாகக் கூறிய வள்ளுவர், தமக்குப் பொருத்தமான இடத்தில் வலிமைகாட்டிப் போரில் வெல்லும் அரசர் தமக்குப் பொருத்தமற்ற இடத்திற் தோற்றுவிடுவர் என்பதை உள்ளுறையாகக் கூறுகிறார்.
- "வேல் வீரர்களைத் தன் தந்தங்களில் குத்திக்கோர்த்த வலிய யானையாக இருந்தாலும் சேற்றில் அகப்பட்டால் நரிகூட அதனை வென்றுவிடும்" என்பதை வெளிப்படையாகக் கூறிய வள்ளுவர், மிகுந்த வலிமையுடைய அரசரும் பொருந்தா இடத்தில் போர் செய்தால் வலிமை குன்றிய பகைவராற்கூட அழிவர் என்பதை உள்ளுறையாகக் கூறுகிறார்.

**(05 புள்ளிகள்)**

**[05 × 04 = 20 புள்ளிகள்]**

**4.** கம்பராமாயணத்திலே, கங்கைக் கரைக்குப் பெருஞ்சேனையுடன் பரதன் வந்தது முதலாக, குகன் தனது படையைக் கூட்டியது வரையிலான பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விவரிக்குக.

(அ) பரதனுடன் வந்த சேனை பற்றிய வருணனை
(ஆ) குகனது தோற்றமும் சீற்றமும்
(இ) தன் படைகளுக்குக் குகன் இட்ட கட்டளைகள்
(ஈ) கையாளப்பட்டுள்ள உவமை, உருவக அணிகளின் பொருத்தப்பாடு

(20 புள்ளிகள்)

**(அ)**

- யானைப்படை பெருந்தொகையாக இறங்குவதால் ஆறு அருந்துதற்கு உதவாததாகக் கலங்கிப்போதல்
- வானுலகை அடையும்படியாக தூசி எழும் வகையில் குதிரைப்படைகள் வருதல்
- ஆறானது, கடலிலே கலவாது, சேனைக்கடலிலே கலத்தல்
- அறுபதினாயிரம் அக்குரோணி எண்ணிக்கையில் படைகள் காணப்படல்
- தூர இருப்பவர்களும் காணும் வகையில் தூசியை எழச் செய்யும் பெரும்படையாக விளங்குதல்

4 enough

**(05 புள்ளிகள்)**

ஆ)

- இடையில் உடைவாளையும் கையில் வில்லையும் கொண்டிருத்தல்
- கோபத்தில் பற்களால் உதட்டைக் கடித்தல்
- கோபத்தால் தீ உமிழும் கண்களைக் கொண்டிருத்தல்
- இயமனை ஒத்த வலிமையைக் கொண்டிருத்தல்
- துடி, ஊதுகொம்பு ஆகியவற்றை ஒலிக்கச் செய்தல்
- எதிரிகள் படையை எலிப்படை என்றும் தன்னை அரவம் என்றும் கூறுதல்
- நாசி வழியாக புகை வெளியேறுதல்
- புருவம் வளைதல்
- தனது படைகளைக் கூவியழைத்தல்
- ஊழிக்கால மேகம் கிளர்ந்தது போல கங்கை கரையில் படையோடு தோன்றுதல்.

(05 புள்ளிகள்)

5 points

இ)

- இராமனுக்கு அரசு தருவதை எதிர்க்கும் படைவீரர்களை வீரசுவர்க்கம் அனுப்ப ஆயத்தமாகுங்கள்
- போர்ப்பறைகளை அடியுங்கள்
- எதிரிகள் வருவதற்கான வழிகளை இல்லாமல் செய்யுங்கள்
- தோணிகளை ஓட்டாதீர்கள்
- கங்கையின் தென்கரைக்கு வந்தவர்களைப் பிடியுங்கள், இறக்கும்படி அழியுங்கள்

(05 புள்ளிகள்)

04 points

ஈ)

உவமையணி

"காவிரி நாடன்ன கழனி நாடு"

உவமானம் - சோழநாடு
உவமேயம் - கோசலநாடு
பொதுத்தன்மை – வளம், சிறப்பு

"பாலை ஏய் நிறத்தொடு பண்டு தான் படர்
ஓலை ஏய் நெடுங்கடல்"

உவமானம் - பால்
உவமேயம் - கங்கைநீர்
பொதுத்தன்மை – வெண்மை நிறம்

“துப்புடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை ஒப்புடை அண்ணல்”

உவமானம் - சூல்கொண்ட கருமேகம்

உவமேயம் - இராமன்

பொதுத்தன்மை – கருமை நிறம்/ கொடை

“குகன் எனப் பெயரிய கூற்றின் ஆற்றலான்”

உவமானம் - கூற்றுவன்

உவமேயம் - குகன்

பொதுத்தன்மை – ஆற்றல், வீரம்

“கை உறு கவர் அயில் பிடித்த காலன்தான்
ஐ ஐந்நூறாயிரம் உருவம் ஆயின”

உவமானம் - ஐ ஐந்நூறாயிரம் உருவம் எடுத்த யமன்

உவமேயம் - வேட்டுவ வீரர்கள்

பொதுத்தன்மை –உடல்வலிமை, ஆற்றல்

“வலி உலாம் உலகினில் வாழும் வள்உகிர்ப்
புலி எலாம் ஒருவழிப் புகுந்த போல”

உவமானம் - உலகில்வாழும் கூரிய நகத்தையுடைய வலிமைமிக்க புலிகள்

உவமேயம் - குகனது படைவீரர்கள்

பொதுத்தன்மை – பராக்கிரமம்

“அருங் கடையுகம் தனில் அசனிமா மழை
கருங் கடல் கிளர்ந்தெனக் கலந்து சூழவே”

உவமானம் - ஊழிக்காலத்தில் மேகமும் கருங்கடலும் கிளர்ந்தெழுதல்

உவமேயம் - குகன் தனது படைவீரர்களுடன் திரண்டுவந்து தோன்றுதல்

பொதுத்தன்மை – மிகுதி /ஆரவாரம்/திரண்டு எழுதல்

உருவக அணி

- சேனையாம் வேலை
- புருவப் போர்விலான்
- எலி எலாம் இப்படை அரவம் யான்
- வெங்கரி மதத்து அருவி

(05 புள்ளிகள்)

[05 × 04 = 20 புள்ளிகள்]

5. ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது என்ற நாவலில்,

(அ) தாமோதரம் என்ற பாத்திரத்தின் இலட்சியமும் அதை அடைவதில் அவன் காட்டிய தீவிரமும்

(ஆ) பெண்கள் கற்க வேண்டும் என்பதில் தாமோதரம் கொண்ட அக்கறை

(இ) தாமோதரத்தின் காதலும் அது தொடர்பில் அவனிடம் காணப்பட்ட கட்டுப்பாடும்

வெளிப்படுமாற்றினை விளக்குக.

(20 புள்ளிகள்)

**(அ)**

- கல்வியினூடாக முன்னேற்றம் அடைதல். குறிப்பாக டாக்டர் ஆதல்
- 
  - ஆசிரியரின் ஆலோசனைக்கு அமைய யாழ்ப்பாணத்திற்குச் சென்று படித்தல்
  - கொண்டாட்டங்களையும் காதலுக்காகப் பொழுது செலவிடுவதையும் கல்விக்காகத் தவிர்த்து நடத்தல்

(07 புள்ளிகள்)

**ஆ)**

- பெரியபிள்ளையானதும் தனது மைத்துனிக்குக் கல்வியைத் தொடர குடும்பத்தார் அனுமதி மறுத்தபோதும், அவள் கல்வியைத் தொடர வேண்டும் என்பதில் அவர் ஆர்வங்காட்டுதல்
- கல்வியைத் தொடர வேண்டும் என்ற கருத்து செளந்தரத்தின் வாய்மொழியாகவே வெளிவரத் தூண்டுதல்
- கல்வியைத் தொடரும்படி செளந்தரத்துக்கு ஆலோசனை கூறுதல்
- நண்பனொருவன் வேறு காரணங்களுக்காக அவனுடைய காதலியின் கல்வியை நிறுத்த முற்பட்டபோது, அவனுக்குப் புத்தி கூறி, அவள் தொடர்ந்து கற்பதற்கு ஆலோசனை வழங்குதல்
- பெண் கல்வியைத் தடைசெய்யும் சமுதாயத்தின்மீது சீற்றங்கொள்ளல்

(07 புள்ளிகள்)

**இ)**

- தாய்மாமன் மகளான செளந்தரம்மீது மென்மையான காதலை வளர்த்தல்.
- அவளைத் தனிமையில் சந்திக்க நேர்ந்த சந்தர்ப்பங்களிற்கூட கண்ணியத்துடன் நடந்து கொள்ளுதல்
- கல்விக்குக் காதல் தடையாக இருக்கக் கூடாது என்பதில் எப்போதும் கவனம் செலுத்துதல்

(06 புள்ளிகள்)

[07+07+06 = 20 புள்ளிகள்]

6. ந. பிச்சமூர்த்தியின் நெருக்கடி என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு,
(அ) பங்களாக்காரரின் குணவியல்பு
(ஆ) சூழலை விபரிப்பதில் ஆசிரியர் காட்டும் திறம்
(இ) 'நெருக்கடி' என்ற தலைப்பின் பொருத்தப்பாடு
ஆகியவற்றை விளக்குக.

(20 புள்ளிகள்)

(அ)
- இயற்கையை நேசிப்பவர்
- பிறர்துயர் கண்டு இரங்குபவர்
- ஒருவரை அவரது முகக் குறிப்பினால் எடைபோடும் ஆற்றலுடையவர்
- நன்மை விளையும் என்றால் பொய்யுரைக்கவும் தயங்காதவர்
- சமயோசித புத்தியுடையவர்
- துணிச்சல் மிக்கவர்

(07 புள்ளிகள்)

ஆ) சரவணமுத்துவின் வீட்டுச் சூழல்

- வெவ்வேறு பருவத்தில் குழந்தைகள் காணப்பட்டன என்பதை விளக்க, 'படி முதல் வீசம் வரை' என்று கூறுதல்
- வார்த்தைகளால் தெரிவிக்க இயலாத மோசமான நிலையில் வீடு காணப்படல்
- வறுமையால் வாடிய வீட்டின் நிலை
  - தேய்ந்து துருப்பிடித்தவை போன்ற குழந்தைகள்
  - குழந்தைகளின் உடையும் உடையின்மையும்
  - கிழிந்த துணியில் படுத்துறங்கும் நோய்வாய்ப்பட்ட குழந்தை

பங்களாச் சொந்தக்காரரின் வீட்டுத்தோட்டச் சூழல்

- மரத்தில் பாம்பு சுற்றிக்கொள்ளவதுபோல் சீந்தில்கொடி படர்ந்திருத்தல்
- நாரத்தை மரக்கிளையில் தேன்சிட்டுக்குருவிக்கூடு லோலாக்கைப் போல் தொங்கிக்கொண்டிருத்தல்
- சிட்டுக்கள் தம் குஞ்சுகளுக்கு உணவூட்டல்
- தோட்டத்தின் கோடியில் கத்தரிப்பாத்திகள் காணப்படல்
- அவரைக்கொடி கொழுகொம்பின் துணையுடன் படர்ந்திருத்தல்

(07 புள்ளிகள்)

இ)
- வறுமையின் காரணமாக சரவணமுத்து எதிர்கொண்ட நெருக்கடி
- வறுமைக்குத் தீர்வாக அரசாங்கப் பணத்தைப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட நெருக்கடி
- இன்ஸ்பெக்டருக்கு ஏற்பட்ட தொழில்சார் நெருக்கடி

முதலியன வலியுறுத்தப்படுவதால் பொருத்தப்பாடுடையதாக விளங்குகிறது.

(06 புள்ளிகள்)

[07+07+06 = 20 புள்ளிகள்]

7. கவிஞர் அழுக்கரின் எல்லாம் உமதே என்ற கவிதையில்,
   (அ) உழைப்பாளிகளின் அவலம்
   (ஆ) அவர்களைச் சுரண்டும் செல்வந்தர்கள் மீதான கவிஞரின் சீற்றம்
   (இ) சுரண்டுவோர்க்கு எதிராக உழைப்பாளிகளை அணி திரட்டுவதில் கவிஞர் காட்டும் தீவிரம்

என்பன புலப்படுமாற்றினைத் தெளிவுபடுத்துக. (20 புள்ளிகள்)

(அ)

- உணவின்றிச் சோர்ந்து துடித்தல்
- தொடர்ந்து அழுது கண்ணீர் வடித்தல்
- ஆடை நெய்யும் தொழிலாளி ஆடையின்றி வருந்துதல்
- ஆன்மா நொந்து தவிப்புறுதல்
- போற்றுவாரில்லாதிருத்தல்
- முதலாளிமாரால் உழைப்புச் சுரண்டப்படுதல்
- நாயிலும் கீழான வாழ்க்கை வாழ்தல்

(07 புள்ளிகள்)

ஆ)

- மூடை வயிற்றுப் பெருஞ்செல்வன், வேற்று மனிதன், பானை வயிற்றுச் சீமான், நோக்க மில்லாச் சீமான்கள் முதலான தொடர்களைக் கையாளுதல்
- செல்வந்தர்களின் சுகபோக வாழ்க்கையை, கோபத்தோடு விபரித்தல்
- உழைப்பாளிகளைச் சுரண்டி ஏப்பம்விடுபவர்கள் எனல்

(07 புள்ளிகள்)

இ)

- நாயாகச் சோம்பிக்கிடந்தது போதும் எனக் கண்டித்தல்
- இறப்பதற்கு முதல் சுரண்டும் செல்வந்தர்களை அழிப்பதற்குக் கரம் கோர்க்க அழைப்பு விடுத்தல்
- உங்கள் பலத்தினால் ஆக்கவும் அழிக்கவும் முடியுமென தொழிலாளர்க்கு உணர்த்தி, அவர்களைப் போராடத் தூண்டுதல்
  - காடாக்கினியில் தள்ளிவிடல்
  - மண்ணிற் சாம்பரெனத்
    தள்ளி விட்டே மலரட்டும்
  - பல்லை உடைத்து வளர்கின்ற
    பயிருக் கெருவாய்ப் போடட்டும்
- "எல்லாம் உமதே, நீங்களே எஜமானர்" எனக் கூறுதல்

3+2

(06 புள்ளிகள்)

[07+07+06 = 20 புள்ளிகள்]

8. பின்வருவனவற்றுள் ஏவையேனும் இரண்டினை விளக்குக.
(அ) கோயில் திருப்பதிகத்தில் மாணிக்கவாசகரின் பக்தி உணர்ச்சி வெளிப்படுமாறு
(ஆ) இராமாயணத்தோடு தொடர்புடையனவாய் இலங்கையில் நிலவும் ஐதீகங்கள் இலங்கை ஆற்றுப்படையின் பயன்படுத்தப்படுமாறு
(இ) அணிகளைக் கையாள்வதில் சாத்தனாருக்குள்ள திறம் மணிமேகலை பாடப்பகுதியில் வெளிப்படுமாறு
(ஈ) தேம்பாவணி காட்சிப் படலத்தில் யேசுபாலனின் சிறப்புகள் வெளிப்படுமாறு
(உ) இருதுயரங்கள் நாடகத்தில் விவரிக்கப்பட்டுள்ள அரங்க நெறியாள்கை உத்திகள்

(20 புள்ளிகள்)

அ)

- இறை பெருமையைப் பலவாறாகக் கூறுதல்
  - 'ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே'
  - 'ஒன்றுநீ யல்லை அன்றியொன் றில்லை' (முதலியன)
- இறை இயல்புகளைக் கூறுதல்
  - குறைவிலா நிறைவு, குணங்கள்தாம் இல்லா இன்பமே, அருவாம் ஒருவனே (முதலியன)
- இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட தன் நிலையை உணர்த்துதல்
  - பஞ்சபுலன்களின் வழியடைத்து அமுதமாகச் சுரந்து என்னகத்தே தோன்றும் மேலான ஒளி எனக் கூறுதல்
  - அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
    ஆனந்த மாய்க்கசிந் துருக (முதலியன)

**(10 புள்ளிகள்)**

ஆ)

- திரிகூடபர்வதம் என்ற மலையின் உச்சியில் விளங்கும் 'இலங்காபுரி' இராவணனின் தலைநகராக விளங்கியமை
- சீதாப்பிராட்டி சிறையிருந்த அசோகவனம், 'ஹக்கலா' என்ற இடத்தைச் சார்ந்தது என்ற ஐதிகம் மக்களிடத்தில் காணப்படுகின்றமை
- அனுமனால் எரியுண்ட இடம் 'பாலுகம' என்று அழைக்கப்படுகின்றமை
- இராவணன் இறுதியாகப் போர்செய்து வீழ்ந்த இடம் 'இராமலங்கா' என்ற கதை புத்தபிக்குகளிடத்தில் நிலவுகின்றமை
- சீதை சத்தியம் செய்த இடம் 'துரும்வெலா பன்சலா' எனும் கதை சிங்கள மக்களிடத்தில் காணப்படுகின்றமை
- இராவணன் தன் தலைநகரிலிருந்து இரகசியமாக வெளிச்செல்வதற்கான சுரங்கப்பாதை 'இராவண எல்லா' வில் காணப்படுவதாகக் கூறப்படுகின்றமை

**(10 புள்ளிகள்)**

இ)

- ஒரே நேரத்தில் கிழக்கில் உதிக்கும் சந்திரனையும் மேற்கில் மறையும் சூரியனையும் முறையே வெள்ளிவெண்தோடாகவும் பொன்தோடாகவும் கொள்ளுதல்
- பவளத்தைப் போன்ற செந்நிற கால்களையுடையதாய் அன்னப்பறவைகள் காணப்பட்டன (உவமை).
- போர்க்களத்தில் கணவனை இழந்த பெண் ஆற்றமுடியாத துன்பம் உடையவளாகி உறவினர் இல்லம் புகுந்தது போல மாலைப்பொழுது வந்தது (உவமை).
- பசலை நோயினை உடல் முழுவதும் பெற்றவளாகிய மாலை என்னும் பெண் (உருவகம்)
- பசுக்களின் மடியிலிருந்து பொழியும் பாலானது புழுதியை அடக்குதல் (உயர்வுநவிற்சி)

(10 புள்ளிகள்)

ஈ)

- விண்ணவர் வேந்தர்
- உம்பரும் தொழும் இறைவன்
- மண்ணில் உள்ளவர்களை இரட்சிப்பவன்
- அமிர்தம் போன்ற மார்பினை உடையவன்
- எவரையும் வெற்றிகொள்ளக் கூடியவன்
- கொடையில் சிறந்தவன்
- வேதங்களுக்குத் தலைவன்
- தன் ஒரே ஆணை எங்கும் செல்ல ஏகனாக ஆள்பவன்
- எதிர்காலத்தில் நடக்கவிருப்பதை அறிபவன்
- அன்னை தந்தை இல்லாதவன்
- பெரு வெள்ளத்தால் உலகை மூடியும் அக்கினியால் சோதோம், கொமரா முதலிய ஐந்து நகரங்களையும் அழித்தவன்
- தன் துணையல்லாமல் வேறு படை பலம் வேண்டாதவன்

(10 புள்ளிகள்)

உ)

- பின்னணி இசை, ஒலி பற்றிய குறிப்புகள்
- மேடை அலங்காரம்
- பாத்திரச் செயற்பாடுகள் குறித்த விவரணம்
- நெறியாளருடைய உரை
- இரண்டாம் காட்சியில் மேடை பற்றிய சித்திரிப்பு
- நாடகத்தின் முடிவில் நெறியாளர் உரை

10 புள்ளிகள்)

[10 × 02 = 20 புள்ளிகள்]

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை -2023 (2024)

## 72- தமிழ் - II

## புள்ளி வழங்கும் திட்டம்

இவ்வினாத்தாளிற் கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களுள் , முதலாம் பகுதியிலுள்ள முதலாம், இரண்டாம் மூன்றாம் வினாக்களுக்கும் , இரண்டாம் பகுதியிலுள்ள ஐந்து வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்குப் பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும்.

### பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 01. இலக்கணம் | | | | |
| 10x20 | | = | 20 புள்ளிகள் | 20 புள்ளிகள் |
| 02. அ. | சுருக்கம் | = | 13 புள்ளிகள் | |
| ஆ. | கிரகித்தல் | = | 12 புள்ளிகள் | 25 புள்ளிகள் |
| 03. கட்டுரை | | | | |
| | பொருள் | = | 12 புள்ளிகள் | |
| | மொழிநடை | = | 08 புள்ளிகள் | |
| | அமைப்பு | = | 05 புள்ளிகள | 25 புள்ளிகள் |

### பகுதி II

| | | |
|---|---|---|
| 04. அ. | 05 புள்ளிகள் | |
| ஆ. | 05 புள்ளிகள் | |
| இ. | 05 புள்ளிகள் | 15 புள்ளிகள் |
| 05. அ. | 05 புள்ளிகள் | |
| ஆ. | 05 புள்ளிகள் | |
| இ. | 05 புள்ளிகள் | 15 புள்ளிகள் |
| 06. அ. | 05 புள்ளிகள் | |
| ஆ. | 05 புள்ளிகள் | |
| இ. | 05 புள்ளிகள் | 15 புள்ளிகள் |
| 07. அ. | 05 புள்ளிகள் | |
| ஆ. | 05 புள்ளிகள் | |
| இ. | 05 புள்ளிகள் | 15 புள்ளிகள் |
| 08. அ. | 10 புள்ளிகள் | |
| ஆ. | 05 புள்ளிகள் | 15 புள்ளிகள் |

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

**Department of Examinations, Sri Lanka**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)**
**General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)**

| | |
|---|---|
| දෙමළ | II |
| தமிழ் | II |
| Tamil | II |

**72 T II**

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| மேலதிக வாசிப்பு நேரம் | - | 10 நிமிடம் |
| Additional Reading Time | - | 10 minutes |

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

சுட்டெண் : ..............................

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி I இல் உள்ள **மூன்று** வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் - எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு - விடை எழுதுக.
* பகுதி I இல் முதலாம் வினாவில் **இருபது** வினாக்கள் தனியாகத் தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களின்மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி I

**1.** எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் கூட்டுயிர்
(1) ஏ (2) ஔ (3) ஓ (4) ஊ (5) ஆ (...2...)

1.2 பின்வருவனவற்றுள் வளைநா வெடிப்பொலி
(1) ம் (2) த் (3) ற் (4) ட் (5) ச் (...4...)

1.3 உடனிலையாக மயங்காத எழுத்து
(1) ற் (2) ந் (3) ன் (4) ழ் (5) ங் (...4...)

1.4 பின்வருவனவற்றுள் பகுபதம்
(1) மாடு (2) கதிரை (3) அரசி
(4) வேலை (5) மந்தை (...3...)

1.5 கூட்டுப்பகுதி இடம்பெற்ற சொல்
(1) வருகிறான் (2) வந்தது (3) சிந்தித்தான்
(4) கைவிட்டான் (5) வேர்க்கிறது (...4...)

1.6 சாரியை இடம்பெற்ற சொல்
(1) ஓடினான் (2) படிக்கின்றான் (3) வந்தனன்
(4) பாடுவான் (5) நடந்தான் (..3..)

1.7 நிலைமொழி ஈற்று உயிர்முன், வருமொழி முதல் வல்லினம் இரட்டித்துப் புணர்ந்தது
(1) தாய்ப்பால் (2) பலாச்சுளை (3) மனச்சுமை
(4) மரக்கிளை (5) வட்டக்கல் (..2..)

1.8 'தாங்கள் அவசியம் எங்கள் வீட்டுக்கு வருகைதர வேண்டும்.' - இந்த வாக்கியத்தில் இடம்பெறும் 'தாங்கள்' என்ற சொல்
(1) படர்க்கைத் தற்சுட்டுப் பெயர்
(2) மாற்றுப் பெயர்
(3) மரியாதை முன்னிலைப் பெயர்
(4) உயர்திணைப் பன்மைப் பெயர்
(5) மரியாதை ஒருமைப் பெயர் (..3..)

1.9 வினைச்சொல்லில் இடம்பெற்ற குற்றெழுத்து நெடிலாவதன் மூலம் உண்டான ஆக்கப்பெயர்
(1) பாட்டு (2) தோல்வி (3) நாட்டம்
(4) நாற்றம் (5) பேறு (..5..)

1.10 பின்வருவனவற்றுள் உம்மைத்தொகை
(1) வீட்டுவாசல் (2) வீடுவளவு (3) வீட்டுத்தோட்டம்
(4) வீட்டுவிலங்கு (5) வீடுபேறு (..2..)

1.11 பின்வருவனவற்றுள் மரியாதை ஒருமைப் பெயர்
(1) தாயார் (2) தந்தையர் (3) மாமன்மார்
(4) பிள்ளைகள் (5) முதியோர் (..1..)

1.12 'இல்' உருபு ஏதுப் பொருளில் இடம்பெற்ற தொடர்
(1) நாட்டில் நிறைந்துள்ள வளம்
(2) மரத்தில் படர்ந்துள்ள கொடி
(3) மகிழ்ச்சியில் நிறைந்த மனது
(4) மாரிகாலத்தில் பொழியும் மழை
(5) கூட்டில் அடைபட்ட குருவி (..3..)

1.13 சாரியை ஏற்றுவந்த உடைமை வேற்றுமைத் தொடர்
(1) வீட்டுக் கூரை
(2) எனது நண்பன்
(3) அவனுடைய பணம்
(4) உழைப்பாளிகளது உரிமை
(5) காற்றினது சீற்றம் (..5..)

1.14 'இன்' என்னும் இடைநிலை பெற்ற வினைமுற்று
(1) ஓடினான் (2) வருகின்றது (3) போகின்றான்
(4) வாடுகின்றன (5) உறங்கியது (..1..)

1.15 பின்வருவனவற்றுள் வியங்கோள் வினைமுற்று
(1) வாரும் (2) வாருங்கள் (3) வரட்டும்
(4) வராதே (5) வரும் (..3..)

1.16 செயப்படுபொருள் குன்றிய வினை

(1) எரித்தான் (2) விடிந்தது (3) தறித்தேன்

(4) வைத்தான் (5) அடைந்தது

(..2...)

1.17 'வை' என்பது முதல் வினையாக இடம்பெற்ற வாக்கியம்

(1) விளக்கை ஏற்றி மேசையில் வைத்துவிட்டான்

(2) மங்கல விளக்கை ஏற்றிவைத்தார்

(3) பணத்தைப் பதுக்கிவைத்தார்

(4) இப்படி ஆகும் என்று அன்றைக்கே சொல்லிவைத்தேன்

(5) வேண்டிய பணத்தை இப்போதே எடுத்துவை

(..1...)

1.18 இடம் உணர்த்தும் வினையடை இடம்பெற்ற வாக்கியம்

(1) மாணவர்கள் எல்லோரும் சுற்றுலாச் சென்றனர்

(2) எல்லோரும் இங்கே வந்து அமருங்கள்

(3) இனிமேல் நீங்கள் அடிக்கடி வருவீர்கள்

(4) வாகனங்கள் தாறுமாறாகத் திரிகின்றன

(5) வானம் கன்னங்கரேல் என்று இருண்டது

(..2...)

1.19 பின்வருவனவற்றுள் தொழிற்பெயர்த் தொடர் இடம்பெற்ற வாக்கியம்

(1) இராமன் வந்துவிடுவான் என்று பரதன் காத்திருந்தான்.

(2) குகன் தன் படைகளை ஆயத்தம் செய்துவிட்டு பரதனைக் காண வந்தான்.

(3) கைகேயி இப்படி நடந்துகொள்வாள் என்று தசரதன் நினைத்திருக்கவில்லை.

(4) பரதன், நாட்டில் இருந்திருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக்காது.

(5) தாடகை வேகமாக வருவதை இராமன் கண்டான்.

(..5...)

1.20 எண்ணிக்கையை வெளிப்படுத்தும் முறையில் பொருத்தமின்மை காணப்படும் வாக்கியம்

(1) ஏறக்குறைய 30 பேர் கூட்டத்துக்கு வந்தனர்.

(2) தோராயமாக 35 பேர் கூட்டத்துக்கு வந்தனர்.

(3) இருபது, முப்பது பேர் அளவில் கூட்டத்துக்கு வந்தனர்.

(4) அண்ணளவாக 21 பேர் கூட்டத்துக்கு வந்தனர்.

(5) சுமார் 40 பேர் கூட்டத்துக்கு வந்தனர்.

(...4...)

(20 புள்ளிகள்)

**

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)**
**General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)**

| | |
|---|---|
| දෙමළ | II |
| தமிழ் | II |
| Tamil | II |

**72 T II**

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **2**ஆம், **3**ஆம் வினாக்களுக்கும்,

※ பகுதி **II** இல் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

நாள்தோறும் நிகழ்வனவற்றைக் குறித்துவைத்தல் நாட்குறிப்பு எனப்படும். ஆங்கிலத்தில் 'டைரி' (Diary) என்பர். இக்காலத்தில் நாட்குறிப்பு, பெரும்பயனுடையதெனக் கருதப்பட்டுப் பலராலும் போற்றப்பட்டு வருகின்றது.

வணிகர், அரசியலாளர், ஆராய்ச்சியாளர் இவர்கட்கு இது மிகமிக இன்றியமையாதது. வணிகர் தாம் நாடோறும் அறியும் வணிகக் குறிப்புக்களைக் குறித்துக் கொள்வர். அரசியலாளர் நாட்டு நிகழ்ச்சிகளைக் குறித்து வைத்துக் கொள்வர். ஆராய்ச்சியாளர் தாம் கண்ட மாறுதல்களையும் புதுமைகளையும் குறித்துவைப்பர். ஏனையோர்க்கும் இங்ஙனம் இன்றியமையாப் பலவற்றையும் குறித்துவைக்க நாட்குறிப்பு மிகப் பயனுடையதாகும். அறிஞர் தத்தம் எண்ணங்களையும் அனுபவங்களையும் குறித்தல் உண்டு. எவ்வகையிலேனும் மறந்துவிடக் கூடியவற்றை மறவாமல் போற்றும்பொருட்டு இது மிக இன்றியமையாததாகின்றது. இங்ஙனம் குறித்து வைக்காது விடின், ஒருவர் தாம் காண்பன, கேட்பன, அறிவன எல்லாவற்றையும் மறவாதிருத்தல் கூடுமோ?

நாட்குறிப்பின் பயன் மிகப் பெரிது. அது வணிகர்க்கு மிகுந்த ஊதியம் பெற்றுத்தரும்; அரசியலாளரைச் செய்வன திருந்தச் செய்யுமாறு காக்கும்; ஆராய்ச்சியாளரை மேன்மேலும் விடாமுயற்சி செய்யுமாறு தூண்டும்; நல்லறிஞர் தூய வாழ்க்கை நடாத்துமாறு துணைசெய்யும்; தம்முடைய எண்ணங்களிலும் செயல்களிலும் நல்லன, தீயன அனைத்தும் குறித்து வைத்திருப்பவரை, மேலும் தீயன எண்ணாவாறு தடுத்து, நல்லன பெருக்குமாறு ஊக்கும். இங்ஙனம், நல்லாசிரியர்போன்று நாடோறும் உடனிருந்து காத்தலினால், ஆனந்தரங்கம்பிள்ளை, பாரதியார் போன்ற பெரியோரும் நாட்குறிப்பு எழுதும் வழக்கத்தைக் கடமையாகக் கொண்டனர்.

(13 புள்ளிகள்)

56-60 } -2
40-44 }
35-39 -4

35↓ } 2 marks
60↑ }

(அ) சுருக்கம்

- நாள்தோறும் நிகழ்வனவற்றைக் குறித்து வைத்தல் நாட்குறிப்பு எனப்படும்.
- இது மிகுந்த பயனுடையதாதலால் பலராலும் போற்றப்படுகிறது.
- வணிகர், அரசியலாளர், ஆராய்ச்சியாளர் முதலிய பலரும் தத்தமக்கு இன்றியமையாத விடயங்களைக் குறித்துவைக்க இது உதவுகிறது.
- மறந்துவிடக் கூடியவற்றை மறவாமல் போற்றவும் உதவுகின்றது.
- பயன்படுத்துவோர் தேவைகளுக்கேற்ப நாட்குறிப்பால் ஏற்படும் பயன்கள் பல.
- தீயன எண்ணாதவாறு ஊக்கி, தூய வாழ்க்கை வாழ இது துணை செய்யும்.
- இவை காரணமாக சான்றோர் பலரும் நாட்குறிப்பு எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

உள்ளடக்கம் 08

வெளிப்பாட்டுத்திறன் 05

(08 + 05 = 13 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழ் இலக்கியப் போக்கை நோக்கின், அது ஆரம்ப காலத்தில் உலகியற் பண்பு மிக்கதாகவும், பின்பு சமயப் பண்பு மேலோங்கப் பெற்றதாகவும், அண்மைக் காலத்திலே இருவகைப் பண்புகளும் முரண்பட்டு நிற்கும் தன்மையையுடையதாகவும் இருப்பதைக் காணலாம். சேர சோழ பாண்டியராம் மூவேந்தர் ஆட்சி செலுத்திய காலப்பிரிவிலே எழுந்த இலக்கியப் படைப்புகள் பெரும்பாலும் சமயச்சார்பற்றனவாய் விளங்குகின்றன. பரிபாடல் என்னும் தொகை நூலிற் சமய நோக்கும் உலகியலும் இணைந்த பண்பினையுடைய பாடல்கள் காணப்படுவதை நாம் அறியமுடிகின்றது. ஆற்றுப்படையினைத் திசைதிருப்பும் படைப்பாகத் திருமுருகாற்றுப்படை விளங்குகின்றது. இதனைத் தொடர்ந்து சமயப் பண்பு தமிழ் இலக்கியத்தில் மேலோங்குகின்றது. சமயவுண்மைகளை இலக்கணத்திலிடம்பெறும் நூற்பாக்கள் போலக் கூறும் தன்மையையும் அதனைப் பக்தியின் அடிப்படையில் உணர்ச்சியூட்டிக்கூறும் பண்பையும் நாம் காணலாம். பக்தியிலக்கியத்தைப் பேணிப் பேரிலக்கியங்கள் கதைகூற முற்பட்டன. பேரிலக்கியத்தின் ஒடுக்கத்திலேயே தலபுராணங்களும் தல சம்பந்தமான பிரபந்தங்களும் பெருகின. பிரபந்தவகைகளின் பெருக்கத்திலே உலகியற் பண்பு இடம்பெற்றபோதும் இருபதாம் நூற்றாண்டின் விடியலிலேயே அது மீண்டும் தன்னிலை அடைந்தது.

(i) தமிழ் இலக்கியம் சமயச் சார்பற்று விளங்கிய காலப்பகுதி எது?

(ii) உலகியலும் சமய நோக்கும் இணைந்து காணப்படுவதாக இங்கு குறிப்பிடப்படும் நூல் எது?

(iii) தமிழ் இலக்கியத்தில் சமயப்பண்பு மேலோங்குவதற்கு அடிப்படையாக அமைந்த நூல் யாது?

(iv) சமய நூல்கள் உண்மைகளை எவ்வெவ் வகையில் எடுத்துக்கூறுகின்றன?

(v) தலங்கள் சம்பந்தமான நூல்கள் எத்தகைய சூழ்நிலையில் அதிகளவில் தோன்றின?

(vi) 'அது மீண்டும் தன்னிலை அடைந்தது' என்பதன்மூலம் உணர்த்தப்படுவது யாது?

(12 புள்ளிகள்)

(13 + 12= 25 புள்ளிகள்)

ஆ)

I) மூவேந்தர் ஆட்சி செலுத்திய காலப்பகுதியில்

II) பரிபாடல்

III) திருமுருகாற்றுப்படை

IV) இலக்கணத்தில் இடம்பெறும் நூற்பாக்கள் போலக் கூறும் தன்மையிலும், பக்தி அடிப்படையில் உணர்ச்சியூட்டிக் கூறும் தன்மையிலும்

V) பேரிலக்கியங்கள் ஒடுங்கிய காலப்பகுதியில்

VI) தமிழ் இலக்கியப் போக்கு, மீண்டும் உலகியற் பண்பு மிக்கதாக மாறியது என்பது.

(02 × 06 = 12 புள்ளிகள்)

**[13 + 12 = 25 புள்ளிகள்]**

3. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பினைத் தெரிந்து **300 - 350** சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) விண்ணை நோக்கிய மனிதனின் பயணங்கள்

(ஆ) நாட்டின் அபிவிருத்தியில் நமக்கான பங்கு

(இ) இலக்கியமும் சமூக ஈடேற்றமும்

(ஈ) தமிழ் நாட்டாரியலுக்கு பேராசிரியர் சு. வித்தியானந்தனின் பங்களிப்பு

(உ) 'வரப்புயர...'

(25 புள்ளிகள்)

(அ) **விண்ணை நோக்கிய மனிதனின் பயணங்கள்**

- அறிமுகம் - தலைப்புத் தொடர்பான விளக்கம் (விஞ்ஞான முன்னேற்றத்தின் விளைவு)
- ஆரம்பகால விண்வெளிப் பயண முயற்சிகள் (ரஷ்யா, அமெரிக்காவின் முன்னோடி முயற்சிகள்)
- விண்வெளிப் பயணத்தில் ஈடுபட்டுள்ள நாடுகள் (ரஷ்யா, அமெரிக்கா, சீனா, ஜப்பான், இந்தியா)
- விண்வெளிப் பயணங்களால் ஏற்படும் நன்மைகள்
  - தகவல் தொடர்பாடலின் வளர்ச்சி (செய்மதிகள் ஊடான தகவல் பரிமாற்றம்)
  - பிரபஞ்சத்தில் புதிய வளங்களைக் கண்டறிதல்
  - விண்வெளியில் மனிதர்கள் வாழ்வதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்தல்
  - மனித வாழ்வுக்கு அவசியமான கதிர்வீச்சு மூலகங்களைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தல் (யுரேனியம், தோரியம்)

- விண்வெளிப் பயணங்களால் ஏற்படும் தீமைகள்
  - சூழல் மாசடைதல்
  - நாடுகளுக்கிடையிலான தகவல் தொழில்நுட்பப் போட்டிகள்
  - விண்வெளிக் கழிவுகள்
  - அதிக செலவினம்

(ஆ) **நாட்டின் அபிவிருத்தியில் நமக்கான பங்கு**

- அறிமுகம் : தலைப்புப் பற்றிய விளக்கம்
  - பொருளாதார, அரசியல், சமூக, கலாசார அபிவிருத்தி
- பொருளாதார அபிவிருத்தியின் முக்கியத்துவம்
- அபிவிருத்தியின் பங்காளர்கள்
  - மக்களும் அரசு, சமூக நிறுவனங்கள் முதலியனவும்
- அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய துறைகள்
  - விவசாயம், கைத்தொழில், சிறுகைத்தொழில், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு
- அபிவிருத்தியில் முன்னேற்றம் கண்டால் நாடு முன்னேறும். தவறின் முன்னேற்றம் தடைப்படும்.
- அபிவிருத்திப் பணியில் கூட்டுழைப்பின் அவசியம்
- 

(இ) **இலக்கியமும் சமூக ஈடேற்றமும்**

- அறிமுகம் : தலைப்புப் பற்றிய விளக்கம்
  - இலக்கியம் என்பது மொழியை ஊடகமாகக் கொண்ட கலை வடிவம்
  - கருத்துகள், அழகியல் அம்சங்களோடு உணர்வுபூர்வமாக எடுத்துரைக்கப்படும்.
- ஒரு சமூகத்தின் விழுமியங்களைப் பேணுவதிலும் அவற்றைக் கையளிப்பதிலும் இலக்கியங்களின் பங்களிப்பு
- எடுத்துரைக்கப்படும் கருத்துகள் மலினமான உணர்ச்சிகளைத் தூண்டுபவையாக அல்லாது சமூக ஈடேற்றத்திற்கு உதவுபவையாக அமைய வேண்டும்.
  - சமூக அநீதிக்கு எதிரான மனப்பாங்கை வளர்த்தல்
  - சமூக நீதியை உணர்வுபூர்வமாக மக்கள் மத்தியில் பரவச்செய்தல்
  - சமூக முன்னேற்றச் செயற்பாடுகளுக்குத் தூண்டுதல் அளித்தல்
  - மனிதாபிமானத்தை வளர்த்தல்
- சமூகமொன்றின் கட்டுக்கோப்பான இருப்புக்கு இலக்கியங்களின் பங்கு (அரசியல், பண்பாடு)
- சமூகமொன்றின் உயர்வை உணர்த்துவதில் இலக்கியங்களின் வகிபங்கு

(ஈ) **தமிழ் நாட்டாரியலுக்கு பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பங்களிப்பு**

- பேராசிரியர் சு.வித்தியானந்தன் பற்றிய சுருக்கமான அறிமுகம்
- நாட்டாரியல் பற்றிய சுருக்கமான விளக்கம்
- நாட்டாரியலுக்கு பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பங்களிப்பு
  - நாட்டுக்கூத்தினை நவீனமயப்படுத்தியமை (கர்ணன்போர், இராவணேசன், நொண்டி நாடகம், வாலிவதை)
  - நாட்டுக்கூத்துப் பிரதிகளை அச்சேற்றியமை (மூவிராசாக்கள், எண்டிறீக்கு எம்பரதோர் முதலானவை)
  - அண்ணாவிமார் மாநாடுகளை நடத்தியமை, கூத்துக்கலைஞர்களைக் கௌரவித்தமை
  - நாட்டார் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டமை (மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள், மன்னார் நாட்டார் பாடல்கள்)
  - நாட்டாரியல் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியமை; பிறரையும் அவ்வழியில் ஊக்குவித்தமை
  - சமூகத்தில் நாட்டாரியல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியமை
  - பல்கலைக்கழக மட்டத்தில் நாட்டாரியலுக்குக் கணிசமான இடம்கொடுத்தமை

(உ) 'வரப்புயர...'

- தலைப்புத் தொடர்பான விளக்கம் (ஔவையின் பாடல் - வரப்புயர நீருயரும்...)
- நீர்வளம் ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் அவசியமானது. எனவே, நீர்வளத்தைப் பேணுவது அவசியமானது.
- நீர்வளத்தை முறையாக முகாமை செய்தால் விவசாய வளம் பெருகும், மக்களின் பொருளாதார வளம் மேம்படும், பொருளாதார மேம்பாடு நாட்டின் உயர்வுக்கு வழிசமைக்கும், இதனால் அரசின் நிலை சிறப்படையும்
- உழவுத் தொழிலைத் தொடர்ந்து நாட்டின் வளம் பெருக்க அரசும் மக்களும் இணைந்து உழைத்தல் வேண்டும்
- நீர்வளத்தைப் பேணுவதற்கும் அதனை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கும் உயர்ந்த அணைகளோடுகூடிய நீர்த்தேக்கங்களை அமைத்தல் வேண்டும்

**[12 + 08 + 05 = 25 புள்ளிகள்]**

## பகுதி II

4. (அ) எட்டுத்தொகையில் இடம்பெறும் அகத்திணை நூல்கள் பற்றி, சுருக்கமாகக் கருத்துரைக்குக.
(ஆ) சங்க அகத்திணை மரபில் இடம்பெறும் கைக்கிளை, பெருந்திணை பற்றி விளக்குக.
(இ) மடலேறுதல் பற்றி விளக்கி, அதுதொடர்பான இலக்கியமரபு பக்தி இலக்கியங்களில் மாற்றம்பெற்றவாற்றைத் தெளிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

(அ)

- குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை
- குறுந்தொகை
  - 4 - 8 அடி எண்ணிக்கை கொண்ட 400 பாடல்களின் தொகுப்பு
  - அடி அளவால் குறுகிய செய்யுள்களைக் கொண்டிருப்பதால் குறுந்தொகை எனல்
- நற்றிணை
  - 9 - 12 அடி எண்ணிக்கை கொண்ட 400 பாடல்களின் தொகுப்பு
  - 'நல்' என்னும் அடை செய்யுள்களின் சிறப்பு நோக்கி அமைக்கப்பட்டிருத்தல்
- அகநானூறு
  - 13 - 31 அடி எண்ணிக்கை கொண்ட 400 பாடல்களின் தொகுப்பு
  - அடியளவால் நெடிய பாடல்களைக் கொண்டதால் இது 'நெடுந்தொகை' எனவும் அழைக்கப்படுதல்
- ஐங்குறுநூறு
  - 3 - 6 அடி எண்ணிக்கை கொண்ட 500 பாடல்களின் தொகுப்பு
  - திணை ஒவ்வொன்றுக்கும் 100 செய்யுள்கள் வீதம் 500 செய்யுள்கள் காணப்படுதல்
- இந்த நான்கு தொகுதிகளுள் அடங்கும் பாடல் யாவும் ஆசிரிய யாப்பால் அமைந்தவை.
- கலித்தொகை
  - 150 பாடல்களின் தொகுப்பு
  - கலிப்பாவால் அமைந்தது
  - இசையமைதியுடைய பாக்களாய் அமைவன
  - சில பாடல்கள் நாடகப் பாங்கில் அமைந்தவை
  - இதனைத் தொகுத்தவர் நல்லந்துவனார்

(05 புள்ளிகள்)

ஆ)

கைக்கிளை

- கைக்கிளை என்பது ஒரு தலைக் காமம்.
- இது மூன்று வகைப்படும்

  - பருவம் எய்தாத பேதை ஒருத்தியிடம் ஆடவன் ஒருவன் காதல் கொண்டு அவளைப் பற்றி பலவாறு சொல்லிப் புலம்புதல்

  - ஒத்த அன்பினராய தலைவனும் தலைவியும் எதிர்ப்பட்டு கூடும் கூட்டத்தின் முன் பெரும்பாலும் தலைவனிடம் நிகழும் காட்சி, ஐயம், தெளிவு, தேறல் என்னும் நான்கு செய்திகள்

  - கொல்லேறுதழுவுதல் முதலியவை காரணமாக நிகழும் மணமுறைகள்

பெருந்திணை

- பெருந்திணை என்பது பொருந்தாக்காமம்
- ஒருவன் ஒருத்தியிடம் மிக்க காமத்தவனாகி மடலேறுதல், வரைபாய்தல் முதலியவற்றால் தன்னை மாய்த்துக்கொள்வது முதலானவை

**(05 புள்ளிகள்)**

(இ)

- ஒருதலையாகத் தான் காதலித்த பெண்ணைக் கவருவதற்காக, ஆடவன் ஒருவனால் மேற்கொள்ளப்படும் தற்கொலை முயற்சியே, மடலேறுதலாகும்.
- மடலேறுவதற்குப் பனை மடலால் செய்யப்பட்ட குதிரை பயன்படுத்தப்பட்டமை
- இது ஆண்களுக்கு மட்டுமே உரியதாக இருந்தது.
- சங்ககாலத்தில் உலகியல் காதலை வெளிப்படுத்த பயன்பட்ட மரபு, பல்லவர்கால பக்தி மார்க்கத்தில் தெய்வம்மீதான அன்பை வெளிப்படுத்தப் பயன்பட்டது.
- சங்ககாலத்தில் அருகிக் காணப்பட்ட இம்மரபு, பல்லவர் காலப் பக்தி இலக்கியங்களிலும் தொடர்ந்தது.

  உதாரணம் : திருமங்கையாழ்வார் பாடிய
  - பெரிய திருமடல்
  - சிறிய திருமடல்
- பெண்கள் மடலேறுவதாக பக்தி இலக்கியங்களில் இம்மரபு மாற்றம் பெற்றது.

**(05 புள்ளிகள்)**

**[05 × 03 = 15 புள்ளிகள்]**

**5. (அ) காவியம் என்ற இலக்கிய வடிவத்தின் இயல்பினை விளக்குக.**

**(ஆ) சங்கமருவிய காலத்தில் எழுந்த காவியங்கள் குறித்துக் கருத்துரைக்குக.**

**(இ) அவற்றிலிருந்து சோழர்காலத்தில் எழுந்த காவியங்கள் வேறுபடுமாற்றினை விளக்குக.**

**(15 புள்ளிகள்)**

(அ)

- கடவுள் வாழ்த்து முதலியவற்றை முதலில் உடையதாய் விளங்குதல்
- ஒப்பற்ற குணங்களையுடைய ஒருவன் பாட்டுடைத் தலைவனாதல்
- பாட்டுடைத் தலைவனுடைய நாடு, நகரம், பிறப்பு, வளர்ப்பு, அவனுடைய செயற்கரிய செயல்கள் முதலியவற்றை விபரித்தல்
- மேற்கூறிய அனைத்தையும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளும் அமையக்கூறுதல்

(ஆ)

**(05 புள்ளிகள்)**

- சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்கமருவிய காலத்தில் எழுந்த காப்பியங்களாகும்.
- இவை இரண்டும் தமிழ்நாட்டைக் களமாகக் கொண்ட கதைகளை விபரிப்பன
- தமிழர் பண்பாட்டு அம்சங்களை எடுத்துரைப்பன
- இவற்றின் ஆசிரியர்கள் முறையே இளங்கோவடிகள், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆவர்.
- சிலப்பதிகாரம் சமணக் காப்பியமாக கொள்ளப்படுவது; மணிமேகலை பௌத்த காப்பியமாக விளங்குவது.
- இந்த இரு காப்பியங்களும் பெரிதும் அகவற் பாவால் அமைந்தன.
- சிலப்பதிகாரம்
  - சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம்
  - புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களைக் கொண்டது.
  - அரசியல் பிழைத்த அரசர்களுக்கு அறமே கூற்றுவனாக அமைவதையும் கற்புடைய மங்கையர் உயர்ந்தோரால் போற்றப்படுவதையும் ஒருவன் செய்த வினை தப்பாது தன் பயனை ஊட்டும் என்பதையும் உணர்த்தும் நோக்கில் பாடப்பட்டது.
- மணிமேகலை
  - சிலப்பதிகாரக் கதையின் தொடர்ச்சியாக விளங்குகிறது.
  - சிலப்பதிகாரக் கதை மாந்தர்களான கோவலன் - மாதவி ஆகியோரின் மகளான மணிமேகலை இக்காப்பியத்தின் தலைவி ஆவாள்.
  - துறவு முதலான பௌத்த தர்மங்கள் இதில் வலியுறுத்தப்படுகின்றன.

**(05 புள்ளிகள்)**

(இ)

- சங்கமருவிய காலத்தில் எழுந்த காப்பியங்கள்
  - சிலப்பதிகாரம், மணிமேகலை
- சோழர் காலத்தில் எழுந்த காப்பியங்கள்
  - பெருங்காப்பியங்கள் : சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி
  - சிறுகாப்பியங்கள் : யசோதர காவியம், நீலகேசி, சூளாமணி, உதயண குமார காவியம், நாககுமார காவியம்
  - கம்பராமாயணம், பெரியபுராணம் முதலானவையும் உள்ளடங்கும்
- சங்கமருவியகாலக் காப்பியங்கள் தமிழ்நாட்டைப் பின்னணியாகக் கொண்டு பாடப்பட சோழர் காலக் காப்பிங்கள் வடநாட்டுக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டன.
- சங்கமருவிய காலக் காப்பியங்களைப் போலன்றி சோழர் காலக் காப்பியங்கள் தண்டியாசிரியர் கூறிய காப்பிய இலக்கணத்திற்கு அமைய இயற்றப்பட்டுள்ளன.
- சங்கமருவிய காலக் காப்பியங்கள் அகவற்பாவில் பாடப்பட, சோழர் காலக் காப்பியங்கள் விருத்தப்பாவில் பாடப்பட்டுள்ளன.

**(05 புள்ளிகள்)**

**[05 × 03 = 15 புள்ளிகள்]**

6. ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்னர் ஈழத்தில் எழுந்த,
   (அ) வைத்திய சோதிட நூல்கள்
   (ஆ) கண்ணகி தொடர்பான நூல்கள்
   (இ) வரலாறுசார் நூல்கள்
   (ஈ) விரத மகிமை கூறும் புராணங்கள்
   (உ) பிரபுக்கள் புகழ்பாடும் பிரபந்தங்கள்
   ஆகியவற்றுள் எவையேனும் மூன்று குறித்து விபரிக்குக. (15 புள்ளிகள்)

**(அ)**

- வைத்திய நூல்கள்

  செகராசசேகரம் :
  - ஆசிரியர் பெயர் அறியுமாறில்லை
  - விருத்தப்பாவால் பாடப்பட்டது.

  பரராசசேகரம் :
  - ஆசிரியர் பெயர் அறியுமாறில்லை.
  - விருத்தம், கலி, ஆசிரியம் ஆகிய பாக்களால் பாடப்பட்டது.
  - 12000 பாடல்களைக் கொண்டது.

அமுதாகரம் :

- வரதபண்டிதரால் பாடப்பட்டது.
- விசக்கடி முதலானவற்றுக்கு மருந்துரைக்கும் நூல்.
- பாயிரம் நீங்கலாக 324 செய்யுட்களைக் கொண்டுள்ளது.

- சோதிட நூல்கள்

சரசோதிமாலை :

- தேனுவரைப் பெருமாள் என்னும் போசராச பண்டிதரால் பாடப்பட்டது.
- தம்பதெனியாவில் ஆட்சிசெய்த 4ஆம் பராக்கிரமபாகுவின் அரசசபையில் அரங்கேற்றப்பட்டது.
- பன்னிரு படலங்களையும் 934 விருத்தப்பாக்களையும் உடையது.

செகராசசேகரமாலை:

- சோமசன்மாவால் பாடப்பட்டது.
- ஒன்பது படலங்களையும் 290 விருத்தப்பாக்களையும் கொண்டது.

சந்தான தீபிகை:

- இராமலிங்க முனிவரால் பாடப்பட்டது.
- வம்ச விருத்தியினையும் அதற்கான கிரக நிலைகளையும் எடுத்துரைக்கிறது.
- 122 விருத்தப்பாக்களாலானது.

**(ஆ)** **(05 புள்ளிகள்)**

- கண்ணகி வழக்குரை - மட்டக்களப்புப் பிரதேசத்தில் வழங்குவது
- கோவலனார் கதை - யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வழங்குவது
- சிலம்பு கூறல் - முல்லைத்தீவுப் பிரதேசத்தில் வழங்குவது
- இவையனைத்தும் சிலப்பதிகாரக் கதையைத் தழுவி எழுந்த படைப்புகள் ஆகும்.
- கண்ணகி வழிபாட்டோடு தொடர்புடையன.

**(இ)** **(05 புள்ளிகள்)**

வையாபாடல் :

- செகராசசேகரனின் அவைப்புலவரான வையாபுரி ஐயரால் பாடப்பட்டது.
- யாழ்ப்பாண அரசகுல வரலாற்றையும், தமிழர்களின் குடியேற்றத்தையும் கூற எழுந்தது.

கைலாயமாலை :

- முத்துராசகவிராசரால் பாடப்பட்டது.
- சிங்கையாரியன் நல்லூரில் கைலாசநாதர் கோயிலைக் கட்டிப் பிரதிஷ்டை செய்த வரலாற்றைக் கூறுகிறது.
- யாழ்ப்பாணத்தரசர் வரலாற்றைச் சுருக்கிக் கூறுகிறது.

கோணேசர் கல்வெட்டு :

- கவிராசவரோதயனால் பாடப்பட்டது.
- திருக்கோணேஸ்வாத்...

யாழ்ப்பாண வைபவமாலை :

- மாதகல் மயில்வாகனப் புலவரால் பாடப்பட்டது.
- யாழ்ப்பாண அரச பரம்பரை வரலாற்றைக் கூறுகிறது.

பரராசசேகரனுலா, இராசமுறை (கிடைக்கப்பெறாத நூல்கள்)

**(05 புள்ளிகள்)**

ஈ)

சிவராத்திரி புராணம்

- வரத பண்டிதர் இயற்றியது.
- சிவராத்திரி விரதத்தின் மகிமையைப் பாடுகிறது.

ஏகாதசி புராணம்

- வரத பண்டிதர் இயற்றியது.
- ஏகாதசி விரதத்தின் மகிமையைப் பாடுகிறது.

பிள்ளையார் கதை

- வரத பண்டிதர் இயற்றியது.
- விநாயகர் சஷ்டி விரதத்தின் மகிமையைப் பாடுகிறது. **(05 புள்ளிகள்)**

உ)

கரவைவேலன் கோவை :

- யாழ்ப்பாணம் கரவெட்டி எனும் ஊரிலே பெரும் நிலப்பிரபுவாக விளங்கிய வேலாயுதமுதலி எனும் வேலாயுத உடையாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது.
- நல்லூர் சின்னத்தம்பி புலவரால் பாடப்பட்டது.

தண்டிகைக் கனகராயன் பள்ளு:

- தண்டிகைக் கனகராய முதலியாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது.
- மாவிட்டபுரம் சின்னக்குட்டிப் புலவரால் பாடப்பட்டது.

**(05 புள்ளிகள்)**

**[05 × 03 = 15 புள்ளிகள்]**

**7. இருபதாம் நூற்றாண்டில், இலங்கை சுதந்திரம் அடையும் வரையான காலப்பகுதியில்**

**(அ) கவிதை**

**(ஆ) நாவல்**

**(இ) சிறுகதை**

**ஆகிய துறைகளின் வளர்ச்சிப் போக்கினை விபரிக்குக.**

**(15 புள்ளிகள்)**

அ)

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மரபுவழிப் புலவர்கள் சிலர் இருபதாம் நூற்றாண்டின் முற்கூறுவரை வாழ்ந்தமை
  - சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர் முதலானோர்
- இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் மரபுக்கும் நவீனத்துக்கும் இடையிலான போக்குகளைக் கொண்ட கவிஞர்களின் படைப்புகள் வெளிவந்தமை
  - பாவலர் துரையப்பாபிள்ளை, சோமசுந்தரப்புலவர், விபுலாநந்தர், தி.த.சரவணமுத்துப்பிள்ளை முதலானோரின் படைப்புக்கள்
- நவீன கவிதைப் போக்கினை முன்னிறுத்திய கவிஞர்களின் படைப்புக்கள் வெளிவந்தமை
  - மஹாகவி து.உருத்திரமூர்த்தி, அ.ந.கந்தசாமி, மீனாட்சியம்மை நடேசையர் முதலானோரின் கவிதைகள் **(05 புள்ளிகள்)**

ஆ)

- ஐரோப்பியர் ஊடாட்டத்தின் காரணமாக தமிழுக்கு அறிமுகமான இலக்கிய வடிவம்.
- ஈழத்தின் தொடக்க கால நாவல்கள்
  - சன்மார்க்க ஜெயம், நொறுங்குண்ட இதயம், காசிநாதன் நேசமலர் (முதலானவை)
- 1940களில் ஈழகேசரியின் ஊடாக நாவலாசிரியர்கள் பலர் உருவாகியமை
  - வ.அ.இராசரத்தினம் முதலானோர்
- ஆரம்பகால நாவல்கள் சரித்திர சம்பவங்களையும் சமூக சீர்திருத்தத்தையும் சமகால வாழ்வு குறித்த விடயங்களையும் பிரதிபலிப்பனவாக விளங்கின.
- 1940களுக்குப் பின்னர் சமூகத்தைப் பாதித்த சாதியம், சீதனப் பிரச்சினை, பெண்விடுதலை முதலானவை நாவலின் பிரதான பேசுபொருளாக அமைந்தன. **(05 புள்ளிகள்)**

இ)

- ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து தமிழ்ச் சூழலில் சிறுகதை எனும் இலக்கிய வடிவம் எழுந்தமை
- ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள்
  - இலங்கையர்கோன், க.தி.சம்பந்தன், வைத்தியலிங்கம்
- ஈழகேசரியின் வரவு புதிய சிறுகதையாசிரியர்களின் தோற்றத்திற்கு வழிவகுத்தமை
  - சோ.சிவபாதசுந்தரம், கனக. செந்திநாதன் முதலானோர்
- 1940களில் மறுமலர்ச்சிச் சங்க உருவாக்கத்துடன் சிறுகதை புதிய தளங்களை நோக்கிப் பயணித்தமை
  - வரதர், அ.செ.முருகானந்தம், அ.ந.கந்தசாமி முதலானோரின் சிறுகதைகள்
- இப்பின்புலத்தில் சமூக பண்பாட்டுச் சூழல், மண்வாசனை, சமூக சீர்திருத்தக் கருத்துகள், சாதியப் பிரச்சினைகள், இதிகாச, சரித்திர சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு சிறுகதைகள் தோன்றின. **(05 புள்ளிகள்)**

**[05 × 03 = 15 புள்ளிகள்]**

8. (அ) (i) புணர்ச்சியின்போது யகர, வகர உடம்படுமெய்கள் தோன்றுவதற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

(ii) 'நட' என்பதன் பிறவினை, காரணவினை வடிவங்களைக் குறிப்பிடுக.

(iii) ஓடினான் என்ற வினைமுற்றுக்குப் பொருத்தமான தனிவினையடை, கூட்டு வினையடை என்பவற்றை தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

(iv) 'தான்' என்பது படர்க்கைத் தற்சுட்டுப் பெயராகவும் அழுத்தப்பொருள் தரும் இடைச் சொல்லாகவும் வரும் வகையில் தனிதனி வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

(v) பின்வருவனவற்றுள் வழுவுள்ள வாக்கியம் யாது? அதனை வழுவுள்ளது என்று கொள்வதன் காரணம் யாது?

(1) சேனாதிபதி, படைவீரர்கள் முதலானவர்களோடு அரசனும் போருக்குச் சென்றனர்.

(2) படைவீரர்களோடு சேனாதிபதியும் அரசனும் போருக்குச் சென்றனர்.

(3) அரசன் தன் படைவீரர், சேனாதிபதி ஆகியோரோடு போருக்குச் சென்றான்.

(10 புள்ளிகள்)

(அ)

(i) ய் - பனை + ஓலை = பனையோலை / மா + அன் = மாயன்

வ் - பலா + இலை = பலாவிலை / அ + அன் = அவன்

(ii) பிறவினை - நடத்தினான்

காரணவினை - நடப்பித்தான்

(iii) அவன் **நேற்று** ஓடினான்

அவன் **வேகமாக** ஓடினான்

(iv) அவன், தான் செய்வதாகக் கூறினான்

அவன்தான் அதைச் செய்தான்

(v) சேனாதிபதி, படைவீரர்கள் முதலானவர்களோடு அரசனும் போருக்குச் சென்றனர்.

காரணம் : இந்த வாக்கியத்தின் எழுவாய் அரசன்.

எழுவாய் ஒருமையில் இருக்க பயனிலை 'சென்றனர்' என்று பன்மையில் முடிவது வழு

**அல்லது**

'அரசன்' என்பதோடு எண்ணும்மை கொடுத்தது போல் 'சேனாதிபதி படைவீரர்கள் முதலானவர்கள்' என்ற தொடருக்கும் எண்ணும்மை கொடுக்கப்பட்டாமை வழு

**(02 × 05 = 10 புள்ளிகள்)**

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றி, சிறுகுறிப்பு வரைக.

(i) வினா வாக்கிய வகைகள்

(ii) சொற்றொடர் வகைகள்

(iii) வினைச்சொல்லின் இயல்புகள்

(05 புள்ளிகள்)

(10 + 05 = 15 புள்ளிகள்)

ஆ.

(i) வினா வாக்கிய வகைகள்

- வினா வாக்கியங்கள் இரண்டு வகையாக அமைகின்றன.

1. வினாச் சொற்களைக் கொண்டு அமைபவை

உதாரணம் : அவன் யார்?
எங்கே போகிறாய்?
எப்போது வருவாய்?
ஏன் தந்தாய்?

2. வினா இடைச்சொல்லைக் கொண்டு அமைபவை

உதாரணம் : அவன் வந்தானா?
அவனா வந்தான்?
அவன் வருவானோ?

(ii) சொற்றொடர் வகைகள்

- வாக்கிய உறுப்பாக வருகிற சொற்றொடர்கள் பிரதானமாக நான்கு வகைப்படும்.

1. பெயர்த்தொடர் : ஒரு பெயர்ச்சொல்லைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர்

உதாரணம் : மனிதன்
ஒரு மனிதன்
அந்த ஒரு மனிதன்
யாராவது சில மனிதர்கள்

2. வினைத்தொடர் : ஒரு வினைச்சொல்லைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர்

உதாரணம் : பாய்ந்தான்
விரைவாகப் பாய்ந்தான்
மிகவும் விரைவாகப் பாய்ந்தான்

Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers!

3. பெயரடைத்தொடர் : ஒரு பெயரடையைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர்

உதாரணம் : அருமையான
மிக அருமையான
கிடைப்பதற்கு மிக அருமையான

4. வினையடைத்தொடர் : ஒரு வினையடையைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர்

உதாரணம் : அடர்த்தியாக
மிக அடர்த்தியாக
இடைவெளி அற்று மிக அடர்த்தியாக

(iii) வினைச்சொல்லின் இயல்புகள்

- செயலை உணர்த்துதல்
- காலம் காட்டுதல்
- வேற்றுமை ஏற்காமை
- வினை விகுதிகளைப் பெற்று வருதல்
- வியைடைகளைப் பெற்று வருதல்
- பெரும்பாலும் வினையடியாகத் தோன்றுதல்
- சிறுபான்மை பெயர், இடைச்சொற்களின் அடியாகவும் தோன்றுதல்.
- வினையடிகளும் வேறு சில வடிவங்களும் ஏவற்பொருளில் வருதல்

(05 புள்ளிகள்)

[10 + 05 = 15 புள்ளிகள்]

***

PAST PAPERS WIKI

(40) WWW.PastPapers.WiKi (40)

Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers!

PARCEL NO

LOL.lk
BookStore

විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න





කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්

PADANAMA PUBLICATION | pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | T | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න